

திருவல்லிக்கேணி

# ஸ்ரீபார்த்தசாரதிமாலை.




அ. இரங்கசாமிமுதலியார் சன்ஸ்

சென்னை:

பூமகள்விலாசம் பிரஸ்ஸில் பதிப்பித்தது.

இதன் விலை அணா 2.

1925

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி.

ஸ்ரீ

கிருஷ்ணசகாயம்

திருவல்லிக்கேணி

# ஸ்ரீ பார்த்தசாரதிமாலை

## கடவுள் வணக்கம்.

காப்பு-வெண்பா.

திருவல்லிக் கேணிவளர் ஜெயபார்த்த சாரதிமேல்
பருநல்ல நீதிதமிழ் பாடுதற்கு—திருவல்லி
தருண மிதுகாக்கச் சௌரி தமிழ்விளங்கக்
கருணைபுரி வேங்கடத்தான் காப்பு.

எழுசீரடி யாசிரிய விருத்தம்.

ஒருவனே தெய்வமல்லால் வேறேயில்லை யுயிரெல்லா மொன்றுமே யுற்றுப்பார்த்தால், கருவிடமே வித்துமுத லுலகமாச்சு கதிரவனு லுலகமெல்லாம் விளங்கிற்கும், முருவான நட்சத்திரங்க ளிருபத்தேழி லுள்ளபடி நடக்குமல்லால் வேறேயில்லை, பரிமளமே திருவல்லிக்கேணி வாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (க)

அன்னைசொல்லே காயத்ரி மந்திரமாகு மறிந்தவர்க்குத் தந்தை சொல்லே வேதமாகும், மன்னுமஷ் டாக்ஷரஜெப மோட்சமாகும் வயங்குபன் னிருவாழ்வார் முகுந்தனுவார், தன்னிடத்தில் பெருமையுற்றுலவரேதெய்வஞ் சத்தியமா யிம்மொழியை நம்பலாமே, பன்னுமவர்திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (உ)

ஈயாமல் வாழ்ந்தாலுஞ் சுகமுமில்லை இல்லிடத்தை விடவேறே யிடமுமில்லை, வோயாமற் பொய்யுரைத்தாற் சுகமுமில்லை யூருடனே பகைத்தாலு முயிர்க்குச்சேதம், தீயாக மூளுமினி வனித்தியத்தில் தெளிந்தோரைச் சார்ந்திடிலோ வணுகிடாது, பாயாருந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (ங)

பொறுமைபடைத்தோர்க்கு வொருபகையுமில்லைப் பொய்யுரை யாமாந்தர்கட்குப் பாவமில்லை, யறிவுடனேநடப்பவற் கிகழ்ச்சியில்லை

யடங்கிநின்ற மன்னவர்க்கு நிந்தையில்லை, மறுமுகத்தை பாராற்கு வினையுமில்லை மனமறியாப் பொய்யுரைத்தாற்சுகமுமில்லை, பருவமுள்ள திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (ச)

கொண்டவனைமதியாமல் பேசும்பெண்டு குடிக்கியமனவனைவிட வேறேயில்லை, பெண்டிரண்டு கொண்டாலுஞ் சுகமுமில்லை பெருநெருப்பு சாகளவுந் துக்கந்துக்கம், அண்டிநின்ற விடமதனில் மோசஞ்செய்தால் ஆயுளுள்ள வரையுமவ ரலைவாரப்பா, பண்டுமறை திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (ரு)

அரியதனைப் பணியாத ஜென்மமெல்லா மவலமதே யெடுத்துதினம் பூமிபாரம், மருவுமன்பர் தனக்கிடருந் துரோகஞ் செய்தால் மறுபடியுங் கடைத்தேற மார்க்கமில்லை, உறுதிமிக வுறவோடுமோசக்காரருற்றதுணை யென்றவரை நம்பொணாது, பரவிவளர் திருவல்லிக்கேணி வாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (சு)

உதயத்தின் வெய்யதனிற் காயும்பேரும் உத்தமரைக் கண்டுதுதி யாதபேரும், மதியகன்று மூத்தாளைச் சேர்ந்தபேரும் மன்னுசுடலைப் புகையி னின்றபேரும், அதிகாலிற் பாலன்ன முண்டபேரும் ஆயுள்விருத்தி யின்றிமிகக் குறைந்துபோவார், பதியான திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (எ)

சந்திகாலத்தில் வெய்யிற் காயும்பேரும் சற்சனரைக் கண்டுதுதி யாதபேரும், அந்தமிகு மில்லாளைச் சேர்ந்தபேரும் மன்னிரவிற் பாலன்ன முண்டபேருஞ், சிந்தைமகி ழோமபுகை பட்டபேருஞ் சிரஞ்சீவி யாயுலகில் விர்த்தியாவார், பந்தமுறுந் திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (அ)

வலிமையுடனேழைபொருள் பறிக்கொணாது வழக்கிருக்க வழக்கொன்று பேசொணாது, எளியாரை யெதிரிட்டுக் கொள்ளொணாது இரப்பவரை யுதாசினமாய்ப் பேசொணாது, சலியாத தூர்த்தர்களைச் சேரொணாது சற்குருவின்வாய்மொழியைத் தள்ளொணாது, பலிதலருந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே (கூ)

அங்காடிக் கூடைகளைப் பறித்துத்தின்று லதனைவிட தரித்திரங்கள் வேறேயில்லை, சங்கையில்லா திருந்தாலுஞ் சபையினின்று சத்தியங்க ளொருபோதுஞ் செய்யொணாது, தன்கணக்கை பேர்த்தெழுதி மோசஞ்செய்தால் சாகளவுஞ் சுகமில்லை யலைவாரப்பா, பங்கில்வளர் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப்பணிகுவாயே. (கo)

புருஷனில்லாப் பூவைகுடி வாழ்க்கைசெய்தாற் புவியிலபகீர்த்தியொடு நிந்தையுண்டாம், கருஷருக்கும் புருஷருடன் கலந்துவாழ்ந்

தால் கலக்கமது வந்தாலுங் கமறிப்போகும், ரோஷமதை யடக்காம லோங்கும்பெண்கள் உலகதனில்பட்டியெனும் வேசையாவார், பரிட் சையுடன் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. (கக)

முன்னாளிலிரணியன் ராவணனுமற்ற மூர்க்கரெலாம் கெர்வமதால் முழுகிப்போனு, ரந்நாளிற் சிசுபாலன் சகடன்கஞ்ச னருந்தார்களவர வர்க ளகந்தையாலே, தன்னாலே தானழிந்தான் பதுமாசூரன் தரணி யிலே யின்னமுண்டு வனந்தம்பேர்கள், பன்னுமறை திருவல்லிக் கேணி வாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (கஉ)

அரியதமிழ்போதித்து முதவிசெய்து அன்புடனே மர்மமெலா மறிந்துசொன்ன, குருவையினிவஞ்சித்து துரோகஞ்செய்தால் குறை யாதபிணிவறுமைக் குடியாய்நிற்கும், கருதஙேய பெரியோர்க ளுளத் தைக்காண சதாசிவத்தா லருமையெனச் சாற்றலாகும், பருவமதிதிரு வல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (கங)

சாந்தகுணப் பெரியோரைச் சேர்ந்தபேர்க்குச் சஞ்சலமும்வினை பிணியுமணுகிடாது, தாழ்ந்துவிதி கெட்டனென்று காலில்வீழ்ந்தால் தள்ளிவிடப்போகாது தருமமல்ல, சேர்ந்திருந்த குடிவாழ்வைக் கலைத் தபேர்கள் ஜெகமதனிலலைவார்கள் பசாசமாக, பாங்குடைய திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (கச)

கண்டபடி திரிந்தாலுஞ் சுகமிராது காமத்தையிச்சித்தால் வினை விடாது, முண்டைகளைச்சேர்ந்தாலும் பௌஷிராது முன்கோபநாய் களுக்குத் துணையிராது, சண்டைமுனை நிற்பார்க்கு உயிர்நில்லாது சண் டிகளுக் கொருபோதுஞ் சுகமிராது, பண்டிதவாய்த் திருவல்லிக் கேணி வாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (கரு)

அன்னதானந்தவிர தானமில்லை யரிநாமம்விட்டுவேறே மந்திரமில்லை, சொன்னவஷ்டாட்சரமொழியே மோட்சமாகும் துணையான வாழ்வார் கள் முகுந்தனுவார், தன்னிடத்தில் பொறுமையுற்றுல் தருமனுவார் தைரியமுள புருடனே தனஞ்செயனேயாவார். பந்துமறை திருவல்லிக் கேணிவாழுப் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (கசு)

பொருள்தேடி யுண்ணுமற் புதைத்துவைத்தாற் பொருள்காக்கும் பசாசமெனச் சொல்லலாகும், யிருளடர்ந்தமூடருக்கு வாழ்விராது யித க்கமில்லா கண்டகற்குச் சுகமிராது, மருள்பிடிதத காமுகற்கு வினை யிராது மார்க்கமற்று நடப்பவர்க்கு தின்பமிராது, பருவமுறுந் திருவல் லிக்கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (கஎ)

மதியாதார் வாசல்வழி மிதிக்கலாமோ மனமில்லா விடத்திலன்னம் புசிக்கலாமோ, சதிசெய்யுந் துரோகிகளைச்சேரலாமோ தமையனையுமன நோகப் பேசலாமோ, வதிதிகளை யுதாசினமாய்ச் சொல்லலாமோ அரச ரது பொருள்கவர்ந்து வலையலாமோ, பதியான திருவல்லிக் கேணிவா ழும்பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (கஅ)

கொள்ளையிடுங் கள்ளருடன் கூடலாமோ குடியருட னுறவாடி யிருக்கலாமோ, அள்ளியிடும்பிச்சைதனை விலக்கலாமோ அசலுடமைக் காசைப்பட்டுவலையலாமோ, பெண்டுபிள்ளை பொருள்மனையும் நம்பலா மோ புவியில்வெகு வுபாயமதாய்ப் பிழைக்கவேணும், பன்னுதமிழ் திரு வல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (கசு)

மனமறிந்து பொய்சொன்ன லடடாபாவி வாழ்வதென்ன வதனலே மகிழ்ச்சியென்ன, வனுசரிப்ப நேசர்கட்குத் துரோகஞ்செய்தா லாடு பன்றிகோழியைப்போ லழிந்துபோவார், தனதான குடித்தனத்தைக் கலைத்தபேர்கள் சாகளவுமலைவார்கள் பசாசமாக, பனுவாகத் திருவல் லிக் கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (உo)

வஞ்சகமேயனுதினமுஞ் செய்துசெய்து வாழ்வதனுற்பலனென்ன மகிழ்ச்சியென்ன, கொஞ்சமெனவெண்ணுத பாவிநெஞ்சே கொடிதான நரகத்திலழியப்போருய், தஞ்சமென்று நல்லோரைச் சேர்ந்தாயாகில் சகலகலை ஞானமது தரிசிக்கச் செய்வார், தஞ்சனதி திருவல்லிக் கேணி வாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (உக)

நல்லவர்க்குகோபமில்லை பெருமையில்லை நற்கதிக்குச்சமயமிதுவே பட்சமுண்டு, நல்லவர்துற்குணமே பூஷணங்களாகும் வையகத்திலவர் பெருமை சிரிக்கலாகுஞ், சொல்லினுமே யவர்குணம்வேறதாகும் சோதி த்தால் நல்லோராற் காணலாகும், பல்லுயிர்களேத்துமல்லிக் கேணிவா ழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (உஉ)

உத்தமர்போல் வேதாந்தம் பேசிப்பேசி யுறுதியுளோர் யோர்பூ சைசெய்யலாகும், கற்றறிமோழைகளில் ருத்திராட்சப்பூனை கலியுகத்தி லிவர்கள்சில வேஷக்காரர், சித்தியுளப் புனிதருக்கு வெறிதானுண்டு திக்கெங்குந் திரிவார்கள் பேயனைப்போற், பத்திவளர் திருவல்லிக்கேணி வாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (உங)

வாக்கியமேபெரியோர்சொல் வேதமாகும் வரிசைமுறை தள்ளாத வரே யோக்கியமாகும், யோக்கியமுட னடப்பவரே மறையோராவார் உதவிசெய்யும் புண்ணியரே தெய்வமாவார், யோக்கியமுடன் புசித்தெ ன்ன யீயாப்பாவி பிணமதனுக்கிடுபிண்ட சாதமாகும், பாக்கியமேதிரு வல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (உச)

குளித்தென்ன குழைத்தென்ன பூசித்தென்ன கும்பிட்டுக் கண்மூடி ஜபித்தாலென்ன, கனியுறவே கேட்பவருக் கியவேணும் கருத்தை நிலைநிறுத்த மெய்யைக் காணவேணும், ஒளித்திருந்து பேசுகின்ற பாவிகட்கு ஒருபோதுஞ் சுகமில்லை யொழிந்தநெஞ்சே, பளிங்கனைய திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (உரு)

சாபமதாற் பொல்லாங்கு வந்தானல்லோர் சற்குருவா தவனைமெல்லவிளக்கிக்கொள்வார், சோபமுடன் காமத்தைக் கலந்தபோதுஞ் சூட்சமதாய் சுருக்கிலதை நீக்கிவெல்வார், கியாபகங்கள் பிரண்டாலு மகாத்துமாக்கள் கடுகெனவே வதனைமெல்லக் கண்டுகொள்வார், பாபமுறாத் திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப்பணிகுவாயே.(உசு)

வழக்கிருக்க வழக்கொன்று பேசிப்பேசி வாரியதென் நவிலாவண்மைநெஞ்சே, ஒழுக்கமுடன் பெரியோரை யிகழ்வாய்பேசி யுலகத்தில் என்னமிகு பெருமைபெற்றாய், அழுக்கடைந்தமாதர்குழிக் கிச்சைவைத்தே யழிந்துமினிப்போகாதே யறையக்கேண்மே, அழகரினதிருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (உஎ)

தன்னைத்தான் புகழ்வாரே பசாசமாவார் சற்குருவை மதியாதார் பிரேதமாவார், நன்மைகுண மில்லாதார் மூடராவார் நாரணனைத்துதியாதார் நரகஞ்சேர்வார், வண்மையுடன் பாகவதம் படித்தபேர்க்கு வைகுந்தபதவியது சொந்தமாகும், பன்னிகருந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (உஅ)

மூர்க்ககுண முண்டானா லுயிர்க்குச்சேதம் மோகமதுமத்தனையும் ரோகமப்பா, மார்க்கமறி யாதவர்க்குக் கியானமில்லை வழிதப்பி நடப்பார்க்கு கீர்த்தியில்லை, வேர்த்தவுடற் பாடுபட்டு தருமஞ்செய்யார் வேட்டகத்தி லன்னமுணும் பாவியாவார், மார்க்கமுறுந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (உகூ)

எவ்வுலகு மோர்குடைக்கீ ழாண்டபோது மிறந்தொழிந்துபோவரல்லாலிருப்பாரில்லை, யிவ்வுலகில்மோத்திரஞ்சாகேனென் றுமெண்ணமதைவிட்டுவிடுவேழைநெஞ்சே, தெவ்வுலகத்தெமதூதர்வந்துவிட்டாற் றிருடனைப்போல் கீழ்மேலு முழிக்கப்போறாய், பவ்வுலகத் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (ஙO)

ஆபத்தையொழித்தவரை யெண்ணுவஞ்ச ரவைவார்களொருபோதுஞ் சுகமிராது, கோபத்தைப் பாராட்டும் நாய்களுக்குக் குவலயத்தில் வாததுரோகஞ்சாறும், தீபத்தையாலயத்தி லவித்தபேர்கள் தீரா

கொடுகரகஞ்சேர்வாரப்பா, பாபத்தைப்போக்கு திருவல்லிக் கேணிவா ழும் பார்த்தனிட சாரதியை பணிகுவாயே. (ருக)

மனையாள்சொற் கேட்டினிதாய்க் கெட்டபேர்கள் வையகத்தில் கோடானகோடியுண்டு, தனியான வுத்தமிமே லாசைவைத்து தாணி யிலே கெட்டவர்க ளனேகருண்டு, யினிதானசூதாடி யழிந்தபேரையிவ் வள வவ்வளவென் றெண்ணொணாது, பணியனுகா திருவல்லிக்கேணி வாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (ருஉ)

அடங்காதமுண்டைகளாற் குடிக்குநாசமஞ்சாமற்சபையில் நிற் பார் பழிக்குமஞ்சா, யடங்காமற் பேசுகின்ற மடையரோடே வாய்கொ டுத்தால் மோசமப்பா பௌஷிராது, யொடுக்கிவழி நடவாதபெண்டை க்கொண்டா லுள்ளளவுந் தூக்கமதுவுயர்ந்தேகிற்கும், படங்குலவுந்திரு வல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப்பணிகுவாயே. (ருரு)

உத்தமர்க்கு வறுமைமிகவந்தபோது முள்ளமிகக்கலங்கார்கள் மகி ழ்ச்சிகொள்வார், சத்தியமாய் நடப்பவர்க்குயிடறேவந்தாற் றவிரார்யொ ருபோதுஞ்சத்தியத்தை, குற்றமதைநல்லோர்க்குப்பொல்லாற்செய்தாற் கோபமதை யெள்ளளவுங் காட்டமாட்டார், பத்திவளர் திருவல்லிக்கே ணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (ருச)

முழுதுணர்ந்தோராயினும் பொறுமையில்லார் முன்னில்வரு சாப த்தைவிலக்கமாட்டார், அழுதழுது புரண்டாலும் பலசித்தராணுப் போது முள்ளமதைநிறுத்தமாட்டார், வழுவில்லாச்சற்சனருக் கெதுவந் தாலும் வாற்றிவைப்பரனுகாமன்மன்னினுலே, பழுதில்லாத் திருவல் லிக்கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (ருரு)

வெட்கமில்லா மோப்பிகட்குப் புத்திசொன்னல் வெள்ளரிக்காய்க் கதையாக முடியுமப்பா, யக்குதொக்கு மில்லாற்கு முறைகளுண்டோ வடங்காத முண்டைகளுக் கெதிருமுண்டோ, கைக்கடங்காமுத்தமிக் குப் பெருமையுண்டாங் கடுமைவந்தா லுலகமெல்லாங் கலங்கிப்போ கும், பக்குவஞ்சூழ் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (ருசு)

கொண்டவன்சொற்றடுத்தலவும் பெண்டுதன்னைக் கொடிதான பிணியெனவேகூறலாகும், அண்டினவர்க்குத் தருமமதுகணவன்செய் தால்கபடழிக்குமணவாளன் மகிழ்ச்சியென்ன, கண்டவற்கும்பிள்ளை பெண்களதிகமாகிக்காசினியிலுண்டாகுங் கருதிப்பாரே, பண்டையுரு மறைபுகழுமல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே.

அரியானைப்பேதமா யெண்ணபேர்க ளலைவார்கள் அலகையைப் போல மோட்சமில்லை, கருவாமரசவாதசிவபிந்துகட்டிகட்டால் மூதேவி

கைவிட்டேகாள், வுருவானகாயமதை விருத்திசெய்தால் உள்ளபடிரச வாத முடியுமப்பா, பரிவுடைய திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (௩அ)

கொண்டபெண்டை சோரவைத்து கூத்தியாண்டால் குடிவாழ்க்கையுதவாது வியாதிசொந்தம், கண்டவளையுறவாடி காமத்தாலேகணவனையே பிரித்துகொடுந்துரோகஞ்செய்தால், ஓண்டிபனைமரத்திலுறும் பசாசமாவா ளுழலுவள்காணொருபோதுஞ்சேரமாட்டாள், பண்டிவருந் திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (௩௯)

மக்கள்பெண்டுதான்வாழ மனதிலெண்ணி வழக்காடியாணையிட்டுப் பொருளைத்தேடி நிற்குமென்று பொங்காதேபாவிநெஞ்சே நீயே கும்வழியுனக்கு உதவியாமோ, சிக்குமிகுவஞ்சமதுசெய்துகெட்ட திருடர்களைப் பார்த்திருந்து மடடாதம்பி, பக்துவர்சூழ் திருவல்லிக்கேணி வாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (௪0)

சந்ததமும் ஸ்திரீகள்தமைச் சேர்வார்தங்கள் சரீரமிக மெலிந்துவிடுமழகுபோகும், விந்துவிடலுட்லெல்லாம் வெந்துபோகும் வீரியமுமற்றுமேமெலிந்துகேளா, சிந்தையதுநிலையாது வறுமையாலே தீராத பிணியுற்று திகைக்கப்போகுய், பந்தமுறுந்திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (௪௧)

முற்றிலும்வாசித்துணரா மோழைகட்கு முண்டைகட்கு வாய்மதத்தாடகந்தையுண்டாம், வைத்ததமிழ்கரைகண்ட பெரியோரெல்லாம் வணக்கமுண்டு தணப்புகழமாட்டாரப்பா, அத்தியதுபோலுடலம் பறுத்துவெய்ய ரகந்தைமிகப்பேசி யவரழிந்துபோவார், பத்தியுடன் திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (௪௨)

ஒரெழுத்தைச்சொன்னுலும் தெளிந்தசீடருள்ளநாள்வரைக்கும் பூசைசெய்வார், சீரெழுத்தைப் பலகாலுமூடருக்குச்சொன்னுல் சிந்தையதுநோவதல்லாற்சுகமிராது, வேரெழுத்தைக் கண்டோரைநோகச்செய்தால் வெந்தணலால்மூண்டுலகிலழிந்துப்போவார், பார்மகிழுந்திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (௪௩)

எண்ணியெண்ணி நெஞ்சுலர்ந்துபோவதல்லா லேழைமதிலதனலேயாவதென்ன, குண்ணிகுண்ணியழுதாலு மாவதுண்டோ கொழுத்துமுன்புசெய்ததெல்லாம் வீணுய்ப்போமோ, நண்ணியெண்ணிசெய்யாமல்போனபாவி நமன்கையிற்படப்போகுய் நாளைநீதான், பண்ணியுறுவானவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப்பணிகுவாயே.

வெட்கம்விட்ட மோப்பிகட்கு துரைசோறென்பார் வெளிப்பட்டால் தெரியுமந்த பேச்சுதானே, அக்குதொக்குமில்லாதபெண்களப்பா வாளனுக்கு வணங்கிதனி பேசமாட்டார், நக்கியெனும் நாய்களுக்கு வெட்கமுண்டோ நால்வர்நகைசெய்தாலு மீனமுண்டோ, பக்குவர்சூழ் திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப்பணிகுவாயே. (சரு)

நடக்கையெலாந் துர்நடையாய் நடந்ததுரோகி நடுநிலையாய்ச் சபைதனிலேநீதிபேசி; அடுத்தவரைக்காராமற் பணத்தைச் சேர்த்து வதனாலேநீவாழ்ந்துளுத்ததென்ன, கடுத்தமுகம்பெரியோர்முன் கோபஞ்செய்து கண்காட்சியென்னகண்டாய் நெஞ்சேகூற்றின், படற்கஞ்சா திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப்பணிகுவாயே. (சகூ)

முன்வருங்காரியத்தை யெண்ணுமற்செய்தால் மோசம்வரும்பின்னாலே மூழ்கிப்போவாய், தன்னிடத்தில் மகிமைமிக யிருந்தபோதுந் தாழ்ந்துலகில் நடந்தாலே விளங்குமப்பா, சின்னலெல்லாம் சங்கிதமாய்ச் செய்வார்நல்லோர் சிலுமிஷமாய் நினைத்தவர்க ளழிந்துபோவார், பன்னுமறை திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (சஎ)

ஆரியகூத்தாடினுமோ சமுசாரத்தி லகப்பட்டோர்வெறியனைப்போல் தேறமாட்டார்; காரியத்தைமறவாதே மோசம்மோசம் கடைவழிக்கு மிதுகளெல்லாமுதவாதப்பா, வீரியத்தைப்பேசியவர் பொறுமையுற்றால் வெகுளியைப்போற் றிரியாதேயுன்னிப்பாரு, பாரிலுயர்திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (சஅ)

குடியனைப்போல்வெறியனைப்போல் குழந்தைபோலுங் குறியற்ற பெரியோர் களிருந்தபோதும், வடியன்னம்பூத்திருக்கும் தணலின்மீது வைப்பாரோ கையதன்மேல் மோசம்மோசம், கடுமைவிட்டுப் பொறுபொறு பாவிநெஞ்சே கண்ணனை தியானிக்கின் மோட்சமுண்டாம், படிபுகழுந் திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப்பணிகுவாயே.

ஆங்காரகாலமதி லகந்தைசெய்தா லத்தனையுந் தப்பியடாவீணுய்ப்போகுஞ், சாங்காலம்வரும்போது யிவைகளெல்லாஞ் சத்தியமாய் வினையாக மூளுமப்பா, நீங்காமலரிநாம மந்திரத்தை நிர்மலமாய் நினைவுற்றால் மோட்சமுண்டு, பாங்காருந் திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (ருo)

நல்லோர்கள் பொல்லாங்கு செய்யச்சொல்வார் நம்பியதை செய்தாலே தம்பிகேளா, செல்வமுண்டு கீர்த்தியுண்டு புண்ணியமுண்டு

ஜெகத்திலிதைக் கேட்போர்க்கு மோட்சமுண்டு, பொல்லார்க நன்மொழிதான் சொன்னபோதும் புகழ்ச்சியில்லை கீர்த்தியொடு புண்ணியமில்லை, பல்லாண்டே யோங்குவல்லிக் கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (௫௧)

தேசமதிற்சாலங்கள் மகாத்துமாக்கள் செய்வார்கள் நாமதற்குய் வோமாகில், ஆஸ்பதமாய் நரகத்திலிறந்துபோவா யவர்களுக்குப் பேதமில்லை யாவுமொன்றே, வாசமுறும் நல்லோர்கள் மகிமைகாண வையமதிலெவர்களுக்கு மரிதுசொன்னேன், பாசமுறுந் திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (௫௨)

பொய்யுலவும் பெண்களுக்கு கோபமுண்டாம் பொங்குபுனல் காட்டிசத் தியமுஞ்செய்வார், மெய்பேசு முத்தமிக்கு உயிர்போனாலும் வெளிபட்டே சத்தியத்தை விரும்பமாட்டார், கையுதவிச்செய்பவர்கள் பெருமைபேசார் கடைகெட்ட வுலுத்தர்கட்கு வாயுண்டாகும், பையரவத் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே.

சதமான பெருமைதனை மறக்கவேண்டாம் சத்தியத்தை யொருபோது மழிக்கவேண்டாம், மதமான வாங்காரங் கொள்ளவேண்டாம் மர்மமுளமந்திரத்தை விரிக்கவேண்டாம், யிதவுரைக்கும் வீணர்சொல்லைக் கேட்கவேண்டாம் ஈனருடனுறவாடித் திரியவேண்டாம், பதமாருந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப்பணிகுவாயே. (௫௪)

அன்பின்றி பூசைமுகத் தென்னலாபம் ஐயமிடா திருந்தென்ன வுதவியாகும், தன்மையில்லா தருமமது விளங்காதப்பா தானென்று மாண்மையுளா ஞசமாவான், மின்மையினிற் செய்தவொரு நன்மை துன்மை எள்ளளவும் போகாம லணுகுமப்பா, பன்னிபுகழ் திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (௫௫)

நிக்சயமாயென்வார்த்தைக் கேட்பாயாகில் நீபோகும்வழிகளுக்கு மோட்சமுண்டாம், அட்சயமாம் பொறுமைதன் சத்தியங்க ளன்னை தனைக்கைக்கொண்டாற் றெய்வமாவாய், லட்சணமாய்ப் பெரியோரைச் சார்ந்தாயாகில் நரகமற்று மோட்சமுண்டு நம்புநம்பு, பட்சமுறுந்திருவல்லிக் கேணிவாழும்பார்த்தனிடசாரதியைப்பணிகுவாயே (௫௬)

இடியதுபோலேழைகள்மேல் பழியைச்சாற்றி யென்னபலன் அனுபவிப்பாய்வையமீது, வடிவமிகுதனக்குநல்ல காலம்வந்தால் மண்மீது வுபகாரஞ் செய்யவேண்டும், கொடியமகா பாவியென்று பெயரைத் தேடி குவலயத்தி லென்னபலன் காணப்பெற்றுய், படிபுகழுந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப்பணிகுவாயே. (௫௭)

உத்தமர்சொற் பொருளுடையோன் கேட்கமாட்டார் வுடலமதி
ற்வனுவுள்ளோ ருடுங்கிப்பேசார், சத்தியத்தை நினையாற்கு வாழ்வி
ராது சபலசித்தப்பேய்களுக்கு துக்கஞ்சேரும், பத்தியுள்ளமானவற்
குக் கிலேசமில்லை பண்புளர்சொல் லொருக்காலும் பழுதிராது, பத்தி
வளர் திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே.

ஆவென்றேவாய்திறக்குஞ் சோற்றைக்கண்டா லண்டசராசரமா
கும் புவனமெல்லாம், தேவிமிசை வருசிவனுற் காண்பதல்லாற் ஸ்ரீகி
ருஷ்ண மகிமைதனைச் செப்பக்கேண்மே, ஓமென்று மஷ்டாட்சரத்
தைவிட வேறேயில்லை வுறுதியாய் நம்புநீயுஞ்சொன்னேன் சொன்
னேன், பாவனமே திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப்
பணிகுவாயே. (௫௯)

உறவென்றுசடலத்தை நம்பவேண்டாம் உதவாதுயனித்தியத்தி
லேழைநெஞ்சே, மரமேழுந்துளைத்தபிரா னடியைப்போற்றி மாளாய்
நீசிரஞ்சீவியாகவாழ்வாய், வரமென்றுசொல்வதரி மந்திரமாகும் மறவா
மலெப்போதுந் தியானஞ்செய்வாய், பரமென்னுந் திருவல்லிக்கேணிவா
ழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (௬௦)

ஆங்காரமதமெல்லாங் கொஞ்சகால மறிந்திருந்து பேரொளியை
நினைக்கமாட்டார், தீங்கான செயலதனைக் கண்டுந்துஷ்டர் சிந்தையிலே
வணுவளவு நீக்கமாட்டார், வாங்காதே யருகிருந்து நல்லோர்சொல்லை
மனதுற்றுந் தெளியார்கள் மடையரப்பா, பாங்கான திருவல்லிக்கேணி
வாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (௬௧)

மெய்போலே பேசுவார்கள் பிரட்டையெல்லாம் வீணரவர் வே
சைகளைக் கெடுக்கவெண்ணி, கைமீது கைபோட்டுக் கொடுப்பாரந்தோ
கைப்பொருளைப் பறிப்பதன்றி யவளைக்கூடப், பொய்யாலே வருவ
தென்ன வலைந்தநெஞ்சே போதனையையுய்த்துணர்ந்த மாலைபோகிப்,
பையணையிற் றிருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணி
குவாயே. (௬௨)

ஏழைகள்மே லஞ்சாமற் பழியைப்போட்டு யில்லையெனக் கூலி
தனை யெடுத்துக்கொண்டு, வாழ்வதென்ன யிப்புவியி லனித்தியத்தில்
வைத்துயெங்கே போவாய்நீ மடமைநெஞ்சே, கோழையுடன் ஷேப்
பமதுகட்டிக்கொண்டு குளறியுயிர்போகுமடா பாவிநெஞ்சே, பாழியு
டன்திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே.

மாடுபோற் சுமைகூலி கொடாதபாவி மன்னுரைசுவாமிக்குப் பிரா
ர்த்தனைகள்செய்து, ஆடுவெட்டிப் பொங்கலிட்டு பலிகொடுத்து ஆவ
தென்னவதனாலேவலைந்தநெஞ்சே, தேடுகின்றபொருளதனைத் தருமஞ்
செய்யார்தேவியர்க்குச்சேர்த்து வைத்தால்மானம்போகும், பாடலுறுங்
திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (௬௩)

களிப்புடனேவோதிவைத்த குருவுக்கியார் கடைகேடாய் முடிவத
னில் நாசமாவார், அனுசரிப்பார் நேசர்கள்கை யடித்துப் பின்னேயதை
மறந்தா லாசார மன்னர்சொல்வார், கனியடா வந்தாலுந் தந்தைதாயே

தள்ளாம லன்னவரைக் காக்கவேணும், பணியணுகாத்திருவல்லிக் கே ணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (சுரு)

தேங்காத பெரியோர்சொல் லமுர்தமென்று திருடர்களுக்கறிந்து கொளுந் தெளிவுமுண்டோ, நீங்காதகாமுகற்கு தியானமுண்டோ நிலை காணு மூடருக்குவிவேகமுண்டோ, வாங்காததுன்மார்க்கப் பேய்களு க்கு வழிகண்டுநிலைசாரு வண்ணமேது, பாங்கான திருவல்லிக்கேணிவா ழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (சுசு)

வேசையர் கட்கதிகமாய் சூதிற்றேர்ந்து வேடமதுதரித்துதண்ட னென்றுகூறத், தோஷியவள்மெய்யென்றே யவளைநம்பி தொண்டுசெ யும்விதக்கடனை சொல்லொணுது, யேசிடவேமுடிவதனி லென்னகண் டாய் இலவுகாத்தகிள்ளையைப்போ லானுளந்தோ, பாசமுறுந் திருவல் லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (சுஎ)

கற்றோர்க்கு மனங்களிக்க பணிகள்செய்யார் காமுகற்குப்பணிவி டைக ளனந்தஞ்செய்வார், சுத்தமகாத்துமாக்களுக்குத் தொண்டுசெய் யார் சூதுகற்றபுலையருக்குத்தொழும்புசெய்வார், மெத்தமெத்த கர்ம மதை யிகழ்ந்துகொள்வார் வெறிபிடித்த பேய்களின் விதங்களப்பா, பத்தர்தொழுந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (சுஅ)

தலைமுழுக்குநான்குமூன்றிற் ஸ்ரீகடன்னைத் தடமாடிவியாதியினுற் சமாதியாவார், பிலமென்று மனம்போனபடிநடந்தாற் பிரியாதபிணி யடைந்து பசாசமாவார், நலமென்னும் பெரியோர்சொல் கேட்பதெல் லாம் நற்கதியு மிகமதனிற் கீர்த்தியுண்டாம், பலனுதவுந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (சுகூ)

எண்ணையிட்டுத் தலைமுழுகி கலவிசெய்தால் இறந்திடுவாய் சமர் த்தோடும் பேசவேண்டாம், தண்ணியது மூன்றுபிழை பொறுக்குமப் பா தலைமுழுக்கு வொரேவிசையாற் றப்பாமற்கொல்லும், மன்னுபூவில க்கமதுகண்டுதானுமாளளவு மெமவாலைததீராதப்பா, பண்ணினிகர் திரு வல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே (எ0)

காமத்தால்மகிழ்ச்சியென்றுஞ் சந்தோஷமென்றுங் கண்டதப்பா தீராதவியாதியாகும், காமத்தால் முன்னுலே கெட்டபேர்கள் தரணியி லே யனேகருண்டு சாற்றொணுது, நேமத்தா வரியரனைத் தியானஞ்செ ய்தால் நிர்மலமாம் பதவியதைச் சேர்ந்துவாழ்வார், பாவத்தை விலக்கு திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (எக)

மூர்க்ககுண துன்மார்க்க சேட்டையெல்லா முன்னுக்கு விப் போது காட்டுமப்பா, மார்க்கமீதென் றறியாத கசடரெல்லாம் வல்லமை வாய் வீண்பேச்சு பேசுவார்கள், யேர்க்குமோ மூடருரை வையகத்தி லெந்நாளுஞ் சுகமில்லை துக்கமாகும், பார்க்கவரும் திருவல்லிக் கேணி வாழும்பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (எஉ)

வெறியரைப்போன் மூர்க்கரைப்போன் குழந்தைபோ லுருகாட்டி வலிமைபேசி, நெறிகுறிக ளதைக்காண்ப தல்லால்வேறு நிந்தையது சொன்னாலும் பாவமப்பா, பெரியோர்கள் குணமதுவோ வனந்தரூபம் பேய்குணத்தால் நம்மாலேயறிவதில்லை, பரவினுயர் திருவல்லிக்கேணி வாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (எங)

வெறியர்மத்தகர் காமுகர்போற் குழந்தைபோலு மெய்யரைப்போலூமையைப்போல் மேலோர்கள் தாங்கள், நெறிகுறிகளதைக்காண நம்மாலில்லை யாகவதைநீயே நினைக்கவேண்டாம், பெரியோர்கள் குணமறியவனந்தமுண்டு பிசாசகிகர் மாதரைக் காணமாட்டார், பரவினுயர் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (எச)

ஊரடித்துப் பொருள்தேடி வீட்டில்வைத்தா லுனக்கென்னலாபமதில் நரகமல்லால், மாரடிக்கு யழுதகதை யடடாதுரோகி வாழ்வதென்னவேழைபொருள் விஷமேயல்லால், ஆர்படைத்து யார்வாழ்ந்தார் பூமிமீதி லறிந்திருந்துமென்னவுந்தன் வஞ்சநெஞ்சம், பார்படைத்ததிருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (எரு)

நிலைகாணு சமுசாரக் கடல்மூழ்கி நீந்துவதேன்கரையேறவுன்னாலாமோ, விலைமாதர் செய்மோக வலையுட்சிக்கி மீளாம லெந்நாளுமழிந்தாயப்பா, தலையான பெரியோரைச் சார்ந்தாயாகில் தகைசேருமுத்தமியாம் நிலையைச்சொல்வார், பலனோங்குந் திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (எசு)

அழகிருந்து முடல்பருத்து மந்தமுண்டா யமரிக்கையுள்ளவள் போலடங்கிப்பேசி, முழுகிமுக்காற்குளித்தாலு மென்னலாபம்மோகம்தான்வெறிகொண்டு திரியுமாதர், எழலகன்ற நாய்போல வீதிதோறும் மிழந்தகதைபோன்மாதர் புத்திகண்டாய், பழியகலுந் திருவல்லிக்கேணி வாழும்பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (எஎ)

லட்சணமா யிருந்துமென்ன பாரதனி நல்லவளா யிருந்துமென்ன வபத்தைதன்னி, லிட்டமுடன்முறையில்லாப் புருடர்தம்மை யிச்சிப்பதால்கிடைக்கும் லாபமென்ன, கஷ்டமுள்ளவெமபுரத்திற் றாதருன்னை கட்டியடித்திழுப்பதல்லால்கருதிப்பாராய், பட்சமுறுந் திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (எஅ)

மெய்போலேகணவனுக்கிதவுபேசி மேன்மேலுமுறவாடி வேண்டிக்கொள்வார், நெய்யாலும் பாலாலும் உபசரித்து நேர்மைபெறவேகும்பிட்டு நித்திரைகொள்வார், ஐயையோபாவி யிவள்மனதை யறியாமலவள்நிலையி னிற்பதேனோ, பையரவி நடித்தோன்வா ழல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (எக)

தெருவிலேயமர்விளக்கு மோப்பிகட்டு தயவேதுபயமேதுதெய்வமேது, யிருநிலத்தி லவர்க்கொருவர் நிகரமேது கணவனுக்கு மஞ்சுவ

ளோ வஞ்சாளப்பா, மருவிமனையைச்சுகிக்கும் வண்மைவிட்டேமாதவர்க்குத் தொண்டுசெய்யும் வழியைத்தேடு, பருவமுயர் திருவல்லிக்கேணி வாழும் பார்த்தனிடசாரதியைப்பணிகுவாயே. (அ0)

அடிபாவிசண்டாளி கணவன்றன்னை அஞ்சாமல் வஞ்சித்து கபடு பேசி, வடிவில்லாமுடவனுக்கு வேணதீந்து மனமகிழ்வாயிச்சித்தே மானமற்று, முடுகியுயிர்வேளைதன்னில் முழிபிதுங்கி எமபுரத்திற் சுழலப்போருய், படிபுகலுந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (அக)

கள்ளமனப்புருடாது வுறவுகொண்டே கட்டியவளணைந்தசுகங்கழலப்போமோ, எள்ளளவு மிரக்கமில்லா தூதர்தம்மாலெமனுலகிலெரிதழுவச்செய்வாரந்தோ, வுள்ளபடியநுபவத்தை யெடுத்துச்சொன்னேனொருவரையும்விடுவதில்லை யுறுதியாகப், பள்ளிகொள்வானுறைதிருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (அஉ)

தன்கணவன் மன்மதனைப்போலேயோங்க சற்பனைசெய்சண்டாளி தரணிமீது, கன்மமிகு வருமிகட்குப் பொருளைத்தந்தே காதலுடனேயவரைச் சேர்வதென்னே, அங்கிதமா எமபுரத்திலிவளையந்தோ வக்கினியிற்றள்ளுகையிற் றுணையார்செய்வார், பன்னரிய திருவல்லிக்கேணி வாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (அங)

கொண்டவனைக்கருதாமல் மோசஞ்செய்யுங் குடிகேடிவையமதில் அலைவாள்வீணே, கண்டபடி கண்டவரை வழிகளாட்டி கடைக்கெட்ட நாய்களைப்போல் கலப்பதென்னே, தெண்டனைக ளிவடனக்கு எமலோகத்திற்செய்வதல்லா நரகினின்றமீளாதப்பா, பண்டுமறையோதுமல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (அச)

கொஞ்சத்துக்கொருவர்பொருள்மீதிகொண்டாயே குடிவிளங்கமாட்டாயப்பா, வஞ்சகமேமண்மீதுசெய்துநீயும் வாரியதென் னவிலுகிலா மடமையோனே, நெஞ்சரியாப் பொய்யுரைத்தாற் றிருகுநிற்காள் நிச்சயமாயென்மொழியை நம்புநீயும், பஞ்சரஞ்சேர் திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (அரு)

ஊரையடித்தடாபாவி யுலையிற்போட்டு வுள்ளளவுந்தீராத வினையையுற்ருய், போரடிக்குங்களத்தினிலே திருடியுண்டாற் பூவுலகிலுள்ளளவும்பெருமையில்லை, மாரடித்தயேழைகளை நோகச்செய்தால் மகத்தானநரகமப்பா மாண்டுநீங்கா, பாரடித்தோரேத்து திருவல்லிக்கேணி வாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (அசு)

இச்சையுட னொருவனையே மணம்புரிந்து யின்பமெல்லாந்தலைவிதிபோலனுபவித்தே, மச்சமவ்வதனை யிதராளுக் கொப்பாயப்பாவென்னவறைவதொ லடங்காப்பாவி லச்சையிலாள் மனம்போனபடி நடப்பாள் ராச்சியத்திலவள்நடைக்கோரெதிருமில்லை, பச்சைநிறமாலோங்குந் திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (அஎ)

பிரியத்திற்கூசாம லிருட்டுவீட்டில் பிரியமாய் வொருவனிடமிருக் கும்போது, வருத்தமுடனவள்புருஷன் கண்டுயேச வாய்புதைத்துப் பேசாம லெழுந்துசென்றாள், கருத்திலினியவளையிவ ளப்பனென்றோர் கண்காட்சி யாய்க்கண்டு கணக்கோவையா, பகுத்திலகுந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (அஅ)

ஏழைகளுமழுதகண்ணீர் வீணாய்ப்போமோ எப்போது முன்குடி க்குநாசமுண்டாம், வாழ்வதனைச் சதமெனவே வகந்தைபேசின் மாள ளவுந்துக்கமுறுஞ்சுகமிராது, கோழையுளார் தமையடித்துப் பரித்துத் தின்றார் குவலயத்திலுள்ளளவுங் குன்றாப்பாவம், பாழியுறுந் திருவல் லிக் கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (அகூ)

மனையாட்டிமகிழ்ச்சியுற வார்த்தைபேசி வாழ்வதென்ன வதனாலே முயற்சியென்ன, வினிதானபெரியோர்சொல் கேளாதாலே எப்படியுங் கேடுவருங் கீர்த்திகுன்றும், சனியானதுர்நடையாய் வுலகிலுள்ள சகலர் களும்நகைசெய்யு முடல்தானாகும், பனிமலர்சூழ் திருவல்லிக்கேணிவா ழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (கூ0)

புண்ணியர்கள் பொருள்மீது யிச்சைவைத்தால் பிள்ளைபெண்க ளொருபோதும்விர்த்தியாகாது, வெண்ணிமனமறிந்துலகில்மோசஞ்செ ய்தா லதைவிடவும் பாபங்கள் வேறேயுண்டோ, மண்ணுலகில்செனன மெலாந் திரிந்துமென்னவண்மையுட ரொருபொழுதுமிருந்தாலென்ன, பண்ணுலவுந் திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகு வாயே. (கூக)

முழுகியபின் னுடம்பெல்லா மஞ்சட்பூச மோப்பிகளும் பசித்தவ ருக் கன்னமீயார், வொழுகிமிகக் கணவனுடன் மெய்ப்போல்பேசி வூரா ரையிச்சிக்குங் கொடியபாவி, அழுகாலம் வந்தடுத்தாற் கோதானங்க ளபரிமிதயாய்ச்செய்யினும் விடுமோபாபம், பட்சமுடன் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (கூஉ)

கணவனவன் தருமங்கள் செய்யவெண்ணி கடுஞ்சினமாய்க் கூச்ச லிட்டே கதறிவீழும், பிணமனையாள் செத்தென்ன விருந்துமென்ன பேயவளா லுனக்குவரும் புகழ்ச்சியென்ன, மணமுடையாலாகின்றோ வையமீது மாட்சிமையு மிகபரசாதனம்வாய்க்கும், பணியனவுர் திருவ ல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (கூங)

புருஷர்க்குவஞ்சகமாய் நடக்கும்பாவி பொல்லாதமூதேவி புழுத் துமேனி, கர்ச்சித்துபருந்தோடு நாய்பிடுங்க மாட்டாமற்கண்டவர்களே வருமேச, அருச்சித்துமலைவாளே மறுபிறப்பி லையையோயிடுக்கங்கள் சொல்லப்போமோ, பரிசமுறுந் திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. (கூச)

அருந்ததியைச் சாட்சிவைத்தே தாலிகட்டு மருமையுள்ளகணவ னையே வகந்தைபேசி, பொருந்துமனதின்படியே வுலகில்வேறே புருஷர் களையிச்சித்தே திரிந்தபாவி, தெரிந்திருந்து மவளுடனேயென்னநட்பு,

சேணுலகில்வாழ்வுறுற் றீமையுண்டாம் பரிந்தவர்கட்கருள்புரியுந் திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப்பணிகுவாயே. (௯௫)

ஸ்ரீங்காரஞ்செய்துபதி விரதையைப்போற் றேசுலவுஞ் சபைநடுவினின்றுபேசி, போங்காலத் தாலவனு மசலிற்போக புத்தியில்லாதவனுடனே பொருந்தலென்னே, வாய்கொழுப்பாற் கண்டவரை வலுவிற்பேசி வலதுசொலுமூதேவி புழுத்துச்சாவாள், பாங்கான திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (௯௬)

பூமியிலேபொல்லாத பாவியென்று புண்ணியர்களெல்லவரும் புகழப்பெற்றாய், காமிகளைச் சேருவதோ கபடமார்க்கம் கரையேற மாட்டாய்நீ கண்டுகொள்ளே, சீமையிலேயிரந்துண்டே திரிபவற்கு சிலவழித்தாற் பொருளதனை மோட்சமுண்டு, பாலிக்குந் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (௯௭)

தருமமிகச்செய்தோற்குத் தாழ்விராது சற்குருவைவினைப்போற்கு குறைவிராது, மூர்க்கமுடனடப்போர்க்கு வாழ்விராது முண்டைகளுக்கீந்தபொருள் முன்வாராது, தீர்க்கமுளபெரியோர்க்குச் சினமிராது திறமையுள்ளோர் சொல்லென்றுந் தவிரமாட்டார், பாருலவுந் திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (௯௮)

சௌரிதமிழ் படித்தவர்க்கு கியானமுண்டாய் சந்ததியோ டயிஸ்வரியம் தழைத்துவோங்கும், எவர்களுமேகொண்டாடும் கீர்த்தியுண்டாமெழில்பார்த்த சாரதிதுணையுண்டாகும், தவறில்லாவாழ்வாரா தியர்களோடே சத்தியமாய் கலந்திருப்பார்வையகத்தில், பரவிவளர் திருவல்லிக் கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே (௯௯)

சிங்காரமாயிலகுங் கருடன்மீது சிறப்புடனே பன்னித்திராழ்வார் சூழப், பொங்குந்திருப் பாற்கடலிற் சேடன்மீது புகழுடனேபள்ளிகொளு மரங்கநாதன், செங்கண்மாற் றிருவல்லிக்கேணிதன்னிற் றிகழ்பார்த்தசாரதியே சிறியேன்றன்னை, பங்கமிலாதருளும் திருவல்லிக்கேணிவாழும் பார்த்தனிடசாரதியைப் பணிகுவாயே. (௧௦௦)

தனிவிருத்தம்.

இசையோடுபாடுஞ் சங்கீதமதைதவிட
  யின்னதென்றறிவனோ குங்குமமதை
அசையாதேசுமந்திடுங் கழுதையெனினு
  மதனழகையறியுமோ கற்கண்டுசுவையை
விசையர்கவேயெழுங் காகமறியுமோநாய்
  வீறுதேங்காருசியை யறியுமோகுருடன்
உசிதமாணிக்க யொளிவனெங்க
  ளோங்குமார்பெருமைதனை மூடனறிவானோ.

ஸ்ரீபார்த்தசாரதிமாலை
முற்றிற்று.

